தினமலர்
06.09.2019,கோவைபக்கம்-2

# பாரதியார் பல்கலை கால்பந்து கொங்கு கல்லூரி வெற்றி



**கோவை, செப். 6–**

கோவை, பாரதியார் பல்கலையின் கீழ் உள்ள, கல்லூரி மாணவிகளுக்கான கால்பந்து போட்டிகள் அரசூர், கே.பி.ஆர்., கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது.

கோவை, திருப்பூர், ஊட்டி, ஈரோடு பகுதிகளிலிருந்து, 16 அணிகள் பங்கேற்றன. போட்டிகள் அனைத்தும், 'நாக்– அவுட் மற்றும் லீக்' முறையில் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் நடந்த 'லீக்' போட்டியில், அதிக புள்ளிகள் பெற்ற கொங்கு கலை அறிவியல் கல்லூரி முதலிடத்தையும்; பழனிசாமி கலை அறிவியல் கல்லூரி இரண்டாமிடத்தையும்; கோவை பாரதியார் பல்கலை அணி மூன்றாமிடத்தையும் பிடித்தன.

வெற்றி பெற்ற அணிகளுக்கு, பாரதியார் பல்கலை உடற்கல்வி இயக்குனர் ராஜேஸ்வரன், கல்லூரி முதல்வர் பாலுச்சாமி ஆகியோர், கோப்பைகள் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினர்.